# கலைஞரும் நானும்

84

**ஒரே ஒரு பார்வையால், சொல்ல வேண்டியதைச் சொல்லும் அவரது கண்கள். அந்தக் கண்களை நேருக்கு நேராகச் சந்தித்த அனுபவங்கள் எல்லாம் மறக்க முடியாத பொக்கிஷங்கள், என தனது நினைவுகளைப் பகிர்கிறார் புகைப்படக் கலைஞர் யோகா.**











கலைஞருடன் யோகா



# “உன் வண்ணத்தைக் காட்டு யோகா!”

**யோகா,** புகைப்பட நிபுணர்

முத்தமிழறிஞர் கலைஞர் எனக்கு தந்தையைப் போல. அவரைச் சந்திக்கும் போதெல்லாம் அவ்வளவு மரியாதை, அன்பு எல்லாம் கலந்த உணர்வுடன் இருப்பேன். நான் எடுக்கும் புகைப்படங்கள் அவருக்குப் பிடிக்கும் என்பது, என் வாழ்நாள் பேறு. சில புகைப்படங்கள் அவரின் உணர்வுகளைப் பேசும். அந்த நேரத்து உணர்வோட்டங்களை புகைப்படங்களாகப் பதிவு செய்ய, எனக்குக் கிடைத்த வாய்ப்பு, வாழ்நாள் கொடுப்பினை என்பேன்.

புகைப்படக் கலைஞராக ‘குங்குமம்’ இதழில் பணியாற்றத் தொடங்கிய சில மாதங்களில், முதலமைச்சராகப் பதவியேற்றார் கலைஞர். அப்போது, கலைஞர் குறித்து எழுதப்பட்ட ‘கவர் ஸ்டோரி’க்கு புகைப்படம் எடுக்க என்னை அனுப்பினர். நான் கோபாலபுரம் சென்று சேர்வதற்குள், அவர் கோட்டைக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அண்ணன் சண்முகநாதன் மறுநாள் நேரம் வாங்கிக் கொடுத்தார். அடுத்த நாள் அவர் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே சென்று தயாராக இருந்தேன்.

முதல்நாள் வரவில்லை என்பதால், கடிந்து கொள்வார் என நான் பயந்தேன். ஆனால், அப்படி நடக்கவில்லை. “வாய்யா யோகா, உன் வண்ணத்தைக் காட்டு”எனப் புன்னகை யுடன் வந்து நின்றார்.

அந்தக் கட்டுரைக்குத் தேவையானவை நான்கைந்து படங்கள்தான். ஆனால், நான் நான்கு விதமான கேமராக்களில் அவரைப் படம் எடுத்தேன். “என்ன நான்கு கேமரா” என்றார். நான்கு விதமான வண்ணங்களில் படம் கிடைக்கும் என்பதை அவருக்கு விளக்கினேன். அன்று மட்டும் சுமார் 200 படங்கள் எடுத்தேன்.

முதல் முறையாக அவரைப் படம் எடுக்கிறேன் என்கிற எந்தத் தயக்கத்தையும் எனக்கு அளிக்கவில்லை. நான் எப்படியெல்லாம் கேட்டேனோ, அப்படியெல்லாம் போஸ் கொடுத்தார். அந்தப் படங்கள் ‘குங்குமம்’, ‘முரசொலி’ இதழ்களில் வெளியாகி, எனக்குப் பாராட்டுகளைப் பெற்றுத் தந்தன. பின்னர் கட்சி பேனர்களிலும் போஸ்டர்களிலும் பயன்படுத்தப்பட்டன. அப்போது முதலே அவருக்குப் பிடித்த போட்டோகிராபராக நான் மாறி விட்டேன்.

## யோகா எங்க?

அவர் கலந்து கொள்ளும் அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும், கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும் அங்கு நான் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார். சில இடங்களில் என்னைக் காணவில்லை என்றால், “யோகா எங்க?” எனக் கேட்பார். அந்தக் கேள்விதான், என் வாழ்க்கையில் நான் சம்பாதித்த மிகப் பெரிய சொத்து.

ஒருமுறை மலேசியா, சிங்கப்பூருக்கு அரசுமுறைப் பயணமாகச் சென்றார் கலைஞர். ஞாயிற்றுக்கிழமை பயணம் செல்ல வேண்டும். அவரோடு வர உள்ளவர்கள் பட்டியலை வெள்ளிக்கிழமை கொடுத்துள்ளனர். “யோகா பேரு எங்க ?” எனக் கேட்டுள்ளார். அதிகாரிகள் உடனே எனக்கு போன் செய்தனர். கடைசி நேரத்தில் விசா எடுக்கமுடியாது எனக் கூறிய சிறிது நேரத்தில், அடுத்த நாள் காலை சிங்கப்பூர் தூதரகத்துக்குச் செல்லக் கூறினர். விடுமுறை நாளில் என் ஒருவனுக்காக சிங்கப்பூர் தூதரக அதிகாரிகள் வந்து விசா ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தனர். சிங்கப்பூரில் இருந்து மலேசியாவுக்கு விசா வாங்கினோம். அவர் என்னை அங்கீகரித்ததற்கு அந்த ஒரு சம்பவமே சான்று.

சிங்கப்பூரிலும் ஒரு சம்பவம் நடந்தது. எனக்கு ஒதுக்கப்பட்ட அறை 15-வது மாடியென நினைக்கிறேன். காலையில் செல்ல வேண்டிய நிகழ்ச்சிக்குத் தயாராகி வருவதற்குள், கலைஞரின் கார் ஓட்டலில் இருந்து புறப்பட்டுவிட்டது. அந்த நிகழ்ச்சிக்குப் பின் மதியம், அதே ஓட்டலில் மற்றொரு சந்திப்பு. அதனால், காத்திருப்போம் என இருந்துவிட்டேன். மதிய நிகழ்ச்சியில் என்னைப் பார்த்தவர், “காலையில பார்க்க முடியலயே” எனக் கேட்டார். காரணத்தைச் சொன்னதும், “இப்படித்தான் இருப்பீங்களா?” எனக் கடிந்து கொண்டார். அவர் என்னைக் கடிந்து கொண்டது அதுதான் முதலும் கடைசியுமான சம்பவம். மலேசியா, சிங்கப்பூர் பயண அனுபவங்களை சன் டிவியில் பேட்டி அளித்ததைப் பார்த்துவிட்டு, என்னை அழைத்துப் பாராட்டினார்.

## அரசுப் புகைப்படம்

ஒவ்வொரு முறை முதல்வர் பொறுப் பேற்கும்போதும், அவருடைய புதிய படத்தைத் தேர்வு செய்து, அதைத்தான் அரசு அங்கீகாரம் செய்த படமாக உபயோகப்படுத்தச் சொல்வார். அதைத்தான் அரசு அலுவலகங்களிலும், அரசு விளம்பரங்களிலும் பயன்படுத்துவர். அந்த வகையில், இரண்டு முறை கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, நான் எடுத்த படங்களைத்தான் தேர்வு செய்து அறிவித்தார். அப்போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

**2009-ஆம் ஆண்டில், தி.மு.கழகத்தின் கலைஞர் விருது அளித்தார். இப்படிப் பார்த்து பார்த்து என்னை அங்கீகரித்தவர் கலைஞர். தலைவரின் குடும்பத்தினரிடமும் அதே அன்பை உணர்ந்தவன் நான்.**

தென்னிந்திய திரைப்படத் துறை சார்பில், கலைஞருக்கு நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மிகப்பெரிய விழா எடுத்தனர். அந்த நிகழ்ச்சியைப் படம் எடுத்து, ஆல்பமாக தயாரித்துக் கொடுக்கும் பணியை, விழாக் குழுவில் இருந்த ஏ.வி.எம்.சரவணன், கே.ஆர்.ஜி. ஆகியோர் என்னிடம் அளித்தனர். நடிகர் திலகம் சிவாஜி, ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்பட அனைத்து கலைஞர்களும் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை, அடுத்த நாளே ஆல்பமாக தயார் செய்து விழாக் குழுவிடம் அளித்தபோது, “நீங்களே கோபாலபுரம் சென்று கலைஞரிடம் கொடுங்கள்” எனக் கேட்டுக் கொண்டனர்.

நான் கோபாலபுரம் சென்றபோது, தலைவர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார், என அண்ணன் சண்முகநாதன் கூறியதால், ஆல்பத்தைக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டேன். அண்ணா மேம்பாலம் வந்த நேரத்தில், சண்முகநாதன் போன் செய்து, “தலைவர் உங்களை உடனே வரச் சொல்கிறார்” என அழைத்தார். படுக்கையறையில் லுங்கியும் பனியனும் அணிந்துகொண்டு அமர்ந்திருந்தார் கலைஞர். “படங்கள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன. நிகழ்ச்சியை நேரில் பார்ப்பது போன்ற உணர்வை எல்லா படங்களும் ஏற்படுத்துகின்றன. அதைச் சொல்லத்தான் அழைத்தேன்” என்றார். இப்படி அவர் பாராட்டிய பல சம்பவங்கள் உள்ளன.

## என் வழியில் வரணும்


ஒருமுறை தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துவதற்கு அவரைப் படம் எடுத்துக் கொண்டிருந்தேன். தற்போதைய முதல்வர் உடனிருந்தார். கலைஞர் நடந்து வந்த கோணம் சரியில்லை என்பதால், நான், “தளபதியைப் பார்த்து நடந்து வாங்க அய்யா” என்றேன். அவர் ‘டைமிங்’காக, “அவர்தான் என்னைப் பார்த்து நடக்கணும்” என்றார். இப்படிப் பல நிகழ்வுகள் உள்ளன.

ஒரு புகைப்படக் கலைஞருக்கு முதல்முறையாக தமிழ்நாடு அரசு **‘கலைமாமணி விருது’** வழங்கியது என்றால், அது எனக்குத்தான். சேலத்தில் நடைபெற்ற தி.மு.கழக மாநாட்டில் நான் எடுத்த புகைப்படங்களை கண்காட்சி அமைக்கும் வாய்ப்பை அளித்தார். முத்தாய்ப்பாக, 2009-ஆம் ஆண்டில், தி.மு.கழகத்தின் கலைஞர் விருது அளித்தார். இப்படிப் பார்த்து பார்த்து என்னை அங்கீகரித்தவர் கலைஞர். தலைவரின் குடும்பத்தினரிடமும் அதே அன்பை உணர்ந்தவன் நான்.

“புகைப்படக் கலை வியப்படையும் வகையில் ஒளிப்படக் கருவிக்குள் பதித்து, பல்வேறு துறை வித்தகர்களின் பாராட்டுகளைப் பெற்றவர், பெற்று வருபவர் புகைப்பட நிபுணர் யோகா” என எனக்கு பாராட்டு அளித்து, பெருமைப்படுத்திய தலைவரை, என் வாழ்நாள் நன்றிகளுடன் நினைத்துப் பார்ப்பேன்.

*....பகிர்வார்கள்*

## களம் அமைக்கும் கட்டுரைப் போட்டி!




தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 அன்று, தமிழ்நாடு அரசு சமூகநீதி நாளாகக் கடைபிடித்து வருகிறது. இந்த ஆண்டு, சமூக நீதி நாளை சிறப்பாகக் கொண்டாடும் நோக்கில், பல முன்னெடுப்புகளை அரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் சமூக நீதிக் கண்காணிப்புக் குழு சார்பில், கல்லூரி மாணவர்களுக்கு இடையே சமூக நீதியை நிலைநிறுத்தவும், சமூக நீதி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் கட்டுரைப் போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைப் போட்டிக்கு 1. தந்தை பெரியாரும் சமூக நீதியும், 2. சாதி ஒழிப்பே சமூக விடுதலை, 3. பாலினச் சமத்துவம் என மூன்று தலைப்புகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஏதேனும் ஒரு தலைப்பில் ஆயிரம் சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுத வேண்டும்.

அரசு கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயின்று வரும் மாணவர்கள் 12.09.2024 ஆம் தேதிக்கு முன், அஞ்சல் வழியாகவோ அல்லது மின் அஞ்சல் மூலமாகவோ (ஏதேனும் ஒரு வழியில் மட்டும்) சென்னை, அண்ணா சாலையில் உள்ள சமூக நீதிக் கண்காணிப்புக் குழு அலுவலக முகவரிக்கு கட்டுரைகளை அனுப்பி வைக்கலாம்.

பரிசு பெறத் தகுதியான சிறப்பான கட்டுரைகளுக்கு முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்பட உள்ளது. எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கம், இளம் தலைமுறையிடம் செல்வதற்கு, கட்டுரைப் போட்டி களம் அமைக்கும்.

## ஃப்ளாஷ்பேக்



### மனதை விட்டு நீங்காது!



க.மகேந்திரன்

1995-ஆம் ஆண்டு, இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் மாநில இளைஞர் அணிச் செயலாளராக இருந்த போது கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் பேரூர்க் கழகச் செயல் வீரர் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது எங்கள் பேரூர் தி.மு.க. சார்பில், பேரூர்க் கழகச் செயலாளர் என்ற முறையில் தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்தேன். கழகத் தலைவர் தளபதியுடன் பேரூர்க் கழகச் செயலாளராக இருந்த நான் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது. என்றைக்கும் என் மனதை விட்டு நீங்காது..

**– க.மகேந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர், காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றிய தி.மு.க, கிருஷ்ணகிரி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தம்பியை வரவேற்ற அண்ணா!

1963-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, கலைஞர் நீண்ட காலம் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்போது, அறிஞர் அண்ணா வேலூர் மத்திய சிறையில் அடைபட்டிருந்தார். கலைஞர் விடுதலை செய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அண்ணா விடுதலை செய்யப்பட்ட நிலையில், அங்கிருந்து திருச்சிக்கு வருகை தந்து, இரண்டு நாட்களுக்குப் பிறகு விடுதலையான கலைஞரை வரவேற்றார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

573

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131